இராசாங்க அமைச்சின் வெளியீடு

REJECTED

கடிதம் சொல்லும் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்திலும், வெளிநாடுகளில் இடம்பெற்ற பேட்டிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், அதன் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் தாம் காந்தியவாதிகள் என்றும், தமது கட்சி அகிம்சை வழியில் இயங்குவது என்றும் கூறி வந்துள்ளனர். இலங்கையின் பாதுகாப்புப் படையினரின் கைக்குக் கிட்டிய திரு. அமிர்தலிங்கத்தின் மகன், "ரவி" எனக் கையொப்பமிட்ட பகீரதன் எழுதிய கடிதம், ஏனைய பல விடயங்களுடன் திரு. புலேந்திரனைக் கொலை செய்ததாகவும் உரிமை பாராட்டுகின்றது. பயங்கரவாதிகளைப் பயிற்றும் நோக்கத்துக்கென இந்தியாவில் காணி ஒன்றை வாங்கப் போவதாகவும் அது குறிப்பிடுகின்றது. பயங்கரவாதத் தலைவரெனத் தன்னைச் சுயவுரிமை பாராட்டும் பயங்கரவாதத் தலைவருடன் திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் அக்கடிதம் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றது. அமிர்தலிங்கத்தின் மகன் ரவி, தமது தந்தையார் லிபியன் விடயமாகக் கவனித்துக் கொள்வாரெனவும் குறிப்பிடுகின்றார்.

இலங்கையைக் கூறுபோடுவதற்குத் தொடங்கியவர்கள் காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களா என்பதனை இத்துடன் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தை வாசித்து நீங்களே முடிவுக்கு வாருங்கள். பயங்கரவாதிகளுடன் இவர்களுக்குத் தொடர்பில்லையா ? இப்போது நீங்களே தீர்மானியுங்கள்.

ஒக்ரோபர் 7 ஆம் தேதி சென்னையிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய வள்ளுவன் இராசலிங்கத்தை இராணுவத்தினர் கைது செய்தபோது, அவரிடமிருந்து கண்டெடுக்கப்பட்ட கடிதம் ஒன்றைப் பற்றி ரூபவாஹினியில் (இலங்கைத் தேசிய தொலைக்காட்சியில்) நடைபெற்ற பேட்டியின் உள்ளடக்கம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினு :—சென்னைக்குப் போனதாக நான் அறிகின்றேன. என் சென்னைக்குச் சென்றீர் என்பதைச் சொல்லுவீரா ?

விடை : எனது சகோதரி சென்னைக்குச் சென்ருர். அங்கே சென்று மருத்துவக் கல்வி கற்பதற்கு ஆசனம் ஒன்றைப் பெறு வதற்கு அவர் முயன்ருர். ஆகவே, அவருடன் நானும் சென்றேன்.

வினு :—எவ்வாறு அங்கு சென்றீர் ? விமானத்திலா ? அல்லது கடல் மார்க்கமாகவா ?

விடை : தலைமன்னரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு நான் கப்பலிற் சென்றேன்.

வினு :—எப்போது இராமேஸ்வரத்தைச் சென்று சேர்ந்தீர் ? யாராவது தங்களை அங்கே வந்து சந்தித்தனரா ?

விடை : எனது மைத்துனர் பகீரதன் என்னைச் சந்திக்க அங்கே வந்தார். திரு. அமிர்தலிங்கத்தின் மருமகள் இந்தியாவுக்கு வந்துள்ளதாக யாரோ தகவல் கொடுத்திருந்தனர். எனவே, சில பத்திரிகை நிருபர்கள் எனது சகோதரியிடம் வந்து வினுக்கள் கேட்டனர். அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகன் திரு. பகீரதன் ; எனக்கு மைத்துனராக வரப்போகின்றவர். பத்திரிகை நிருபர்கள் எனது சகோதரியிடம் சில வினுக்களைக் கேட்டனர். எனது சகோதரியின் பெயர் மலர்விழி. வடகொழும்பு மருத்துவக் கல்லூரியிலே படிப்பதாக எனது சகோதரி பத்திரிகை நிருபர்களுக்குக் கூறிஞர். நிலைமை அமைதிக்குத் திரும்பியதும் தாம் இலங்கை வந்து தமது கல்வியைத் தொடரப்போவதாகவும் எனது சகோதரி கூறிஞர். சென்னையில் ஒரு ஹோட்டலிலே தங்கினேம். எனது சகோதரியையும் அவரின் சிநேகிதி ஒருவரையும் விடுதி ஒன்றிலே சேர்த்துவிட்டுச் சென்னையிலிருந்து புறப்பட்டேன்.

அடுத்த நாள் எனது சகோதரியின் பேட்டி, " வடகொழும்பு மருத்துவக் கல்லூரி எரிந்துவிட்டதாகவும், அண்மையில் நடந்த வன்செயல் களுக்கு மாண்புமிகு திரு. சிறில் மத்தியு பொறுப்பாவார் " என்றும் பத்திரிகைகளில் வெளிவந்தது. பத்திரிகைகளில் வந்த அந்தச் செய்திகளைக் கண்டு எனது சகோதரி அதிர்ச்சி அடைந்தார். தான் இலங்கைக்குத் திரும்பி, வடகொழும்பு மருத்துவக் கல்லூரியில் கற்கவேண்டும் என்றும் எனது சகோதரி அழுதுகொண்டே கூறிஞர். பத்திரிகையில் அவரின் பேட்டி பிழையாகப் பிரசுரிக்கப்பட்டது. அவரால் எதனையும் செய்ய முடியாது போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினு :—நீர் கூறிய அந்த அமிர்தலிங்கம் யார் ?

விடை : அவர்தான் எதிர்க்கட்சித் தலைவர். தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம்.

வினு :—இலங்கைக்கு வருவதற்கு எப்போது முடிவு செய்தீர் ?

விடை : 4 ஆம் தேதி சென்னையிலிருந்து மதுரைக்குக் சென்றேன். 7 ஆம் தேதி கப்பல் மார்க்கமாக இலங்கைக்கு வந்தேன்.

வினு :—இலங்கைக்கு வருவதற்கு முன்னர், அங்கே யாரையாவது சந்தித்தீரா ?

விடை : 6 ஆம் தேதி மதுரையிலிருந்து புறப்பட்டேன். அதற்கு முன்னர் எனது மைத்துனருடன் தங்கியிருந்தேன். இலங்கையில் தபாலில் அனுப்புவதற்காகச் சில கடிதங்களை எனது மைத்துனர் என்னிடம் மதுரையில் கொடுத்தார்.

வினு :—உமது மைத்துனரின் பெயர் என்ன ?

விடை : அவரின் பெயர் பகீரதன்.

இங்கே தபாலில் அனுப்புவதற்காகப் பகீரதன் மூன்று கடிதங்களைக் கொடுத்தார். அதில் ஒரு கடிதம் மாவை சேனாதிராசா அவர்களிடம் கொடுக்கப்பட வேண்டியது. மாவை சேனாதிராசா ஓர் அரசியல்வாதி. அவர் தமிழ் இளைஞர் முன்னணியின் தலைவர். தலைமன்னாரை வந்தடைந்ததும் ஒரு தனியார் (PRIVATE) பஸ் வண்டியில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டேன். தலைமன்னாருக்கு அண்மையிலுள்ள இராணுவ முகாமில் இராணுவத்தினர் பஸ் வண்டியிலே ஏறி எல்லோரையும் சோதனையிட்டனர். அவ்வாறு சோதனையிட்டபோது என்னிடமிருந்த கடிதங்களைக் கண்டுபிடித்தனர்.

வினு :—கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது தங்களுக்குத் தெரியுமா ?

விடை : அவர் எனது மைத்துனர். ஆகவே அவருக்கு உதவி செய்ய எண்ணினேன். கடிதங்களில் என்ன எழுதப்பட்டிருந்தன என்பது எனக்குத் தெரியாது. அந்தக் கடிதங்களில் எழுதப்பட்டிருந்தவை இன்னவையென்று எனக்குத் தெரிந்திருந்தால் அவற்றை நான் ஒருபோதும் இங்கு கொண்டு வந்திருக்கவேமாட்டேன். அந்தக் கடிதங்களின் உள்ளடக்கங்களை இப்போது நான் அறிவேன். அந்தக் கடிதங்களை வாசிக்குமாறு என்னை இராணுவத்தினர் கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா :—அந்தக் கடிதத்தை எங்களுக்கு வாசித்துக் காட்ட முடியுமா ?

விடை : ஆம். அந்தக் கடிதம் தமிழில் எழுதப்பட்டிருந்தது. அது பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(வள்ளுவன் கடிதத்தை வாசிக்கின்றார்.)

" அன்பு அண்ணனுக்கு,

நான் நலம் ; தங்கள் சுகத்தையும் தமிழ்த்தாய் காப்பாளாக.

இக்கடிதம் வள்ளுவன் மூலம் உங்களிடம் நேரே சேர்ப்பிப்பார். அந்தத் துணிபால் உங்களிடம் பல விடயங்களை இதன் மூலம் பகிர்ந்து கொள்கிறேன். முதலாவது இங்கே இன்னமும் எமது நண்பர்களின் இயக்கங்கள் ஒன்றையொன்று தாக்கி, முன்னுக்குப்பின் முரணாகப் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்து இயங்கி வருகின்றன. தம்பியை அப்பா உவ்விடம் வைத்து சந்தித்துவிட்டு வந்தும்கூட ....

வினா :—" அப்பா " என்பது யாரை ? " தம்பி " என்பது யாரை ?

விடை :—"அப்பா" என்பது திரு. அமிர்தலிங்கத்தைக் குறிப்பிடுகின்றது ; " தம்பி " என்பது பிரபாகரனை.

" அவரின் நண்பர் பாலசிங்கம் இங்கே மிக மோசமான, பாரதூரமான அறிக்கைகள் வெளியிட்டபடி உள்ளார். அவர்களுடன் சேர்ந்த பலரே எம்மை CIA என இங்கே பிரசாரம் செய்கின்றார்கள். அத்துடன் முகுந்தனும், வசந்தன் என இயங்கும் சந்ததியாரும் பத்திரிகை அறிக்கைகளால் எம்மைத் தாக்குகிறார்கள்.

வினா :—முகுந்தன் என்பவர் யார் ? சந்ததியார் என்பது யாரை ?

விடை : முகுந்தன் என்பது உமா மகேஸ்வரனை. சந்ததியார் என்பவர் யார் என்பது எனக்குத் தெரியாது. அவரை நான் பார்த்திருக்கிறேன்.

" மறுபக்கம் சந்திரகாசனும் இலண்டனிலிருந்து பணம்பெற்று இயங்கும் Information Centre உம் திரைமறைவில் எமக்கு எதிராக இயங்குகிறார்கள். DMK க்கு நாம் எதிர் என அவர்களே இங்கே கதை கட்டி சிண்டு முடிக்கிறார்கள். இங்கே வந்துள்ள எமது பா. உக்களில் (பாராளுமன்ற உறுப்பினர்களில்) சிலரின் நிலைமையும் என்னைப் பொறுத்தவரை திருப்திகரமாக இல்லை. இதுதான் இப்போதுள்ள நிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் மத்தியில் (நானும் என் 2 நண்பர்களும்) நாம் எமது சொந்த முயற்சியால் அப்பாவினதும் திரு. சம்பந்தனதும் கடிதங்களைப் படங்களுடன் போட்டு ஒரு புத்தகமாகப் பிரசுரித்துள்ளோம்."

வினா :—திரு. சம்பந்தன் என்பவர் யார் ?

விடை : சம்பந்தன் என்பவர் திருகோணமலையின் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்.

" அது இலண்டன், மே. ஜேர்மனி போன்ற இடங்களில் ஏற்கனவே விற்கப்பட்டுள்ள வண்ணம் உள்ளது. இதற்கு இங்கிலாந்துக் கிளையினர் பண உதவி செய்தனர். இதில் 200 புத்தகங்கள் வேறு வழியால் உங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளேன். அதுபற்றி—பெறுவதுபற்றி கீழே குறிப்புத் தருகிறேன். இங்கே இதன் விலை 5/-. உவ்விடம் பார்த்துக் கொடுத்துப் பணத்தைச் சேர்த்து வைக்கவும். யோகன் இங்கே வந்து என்னுடன் சேர்ந்து இயங்குகிறார். உங்களுக்குத் தெரியும்தானே, நாம் ஒரு தீவிரவாத இயக்கத்துக்கு அத்திவாரமிட்டது. அதன் தளத்தை இப்போது இங்கே அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். இது மக்கள் இயக்கத்துடன் ஒத்துழைக்கும் தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக்கமாகும். வவுனியாவின் புலேந்திரனையிட்ட நடவடிக்கை நாமே செய்தோம் ".

வினா :—திரு. புலேந்திரன் என்பவர் யார் ?

விடை : புலேந்திரன் ஐ. தே. கட்சி அமைப்பாளர்திரு புலேந்திரன் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். எந்தத் தொகுதிக்கு அமைப்பாளர் என்பது எனக்குத் தெரியாது.

" இதைக்கூறி இப்படிப்பட்ட இயக்கம் இயங்கிக் கொண்டிருப்பதாக இலண்டன், ஜேர்மனி போன்ற இடங்களில் பிரசாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு நல்ல ஆதரவு இருந்து வருகிறது. தங்கராசா அண்ணகூட நீங்களும் இதில் இறங்குவதாயின் தானும் ஈடுபடுவதாய்க் கூறியுள்ளார்.

இப்போதும் இங்கே நாம் இலண்டன் கிளையின் உதவியுடன் ஒரு Estate விலைக்கு வாங்குகிறோம். அத்துடன் இன்னோர் காட்டுப் பகுதியும் வசதியாக உள்ளூர்க்காரரின் உதவியுடன் கிடைக்கிறது. இப்போதைக்கு இந்த இரண்டு இடங்களும் போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் 100—50 வரை பயிற்சி கொடுக்கலாம். உவ்விடம் நீங்கள் யோகன் வந்ததும் அவருக்குரிய இளைஞர்களின் தொடர்புகளை ஏற்படுத்தவும், தங்கமயிலோன் போன்றவர்களின் நிலைப்பாட்டையும் அறிய முயலவும். அண்ணா, இத்தனைக்கும் நீங்கள் இங்கு வந்து எமக்கு அறிவுரை கூறி இயங்குவதையே நாம் விரும்புகிறோம். இவற்றை ஆலோசித்து விட்டு விரைவாக எனக்கு உடன் கடிதம் போடவும். "தமிழ்ஈழ தேசிய இராணுவம்" என்பதே நாம் தேர்ந்தெடுத்த பெயர். இங்கேயும் உவ்விடமும் த. வி. கூ. சேர்ந்தவர்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றுத்தர நீங்கள் தான் உதவ வேண்டும். நாம் எந்த இயக்கத்திற்கும் போட்டியாக ஆரம்பிக்கவும் இல்லை. பகையாக இயங்கப் போவதுமில்லை. இது உறுதி. எல்லாவற்றையும் விளக்கி ஆலோசனைகளுடன் உங்கள் கடிதத்தை எதிர்பார்க்கிறேன். லிபிய விடயம் அப்பா கவனிக்கிறார். உடன் பதில். புத்தகங்களை உடன் இக்கடிதம் கிடைத்ததும் பெற்றுக்கொள்ளவும். உங்கள் பெயரைச் சொன்னவுடன் தருவார்கள்.

முகவரி :—

ஸ்ரீ வாலாம்பிகா ரேட் சென்டர்,
2–1/5, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உடன் பதில். அக்கா, குழந்தைக்கும் என் அன்பைத் தெரிவிக்கவும்.

அன்புடன்

தம்பி,

ரவி."

வினா :—"லிபிய விடயம் அப்பா கவனிக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது பற்றிச் சிறிது விளக்கமாகக் கூற முடியுமா ?

விடை : லிபியத் தொடர்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இந்தக் கடிதம் மூலமே லிபியத் தொடர்பு பற்றி அறிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினு :—இந்தத் திட்டம் பற்றிப் பகிரதன் தங்களுடன் கலந்துரை யாடினுரா ?

விடை : ஆம். இல்லை. அவர் அந்தத் திட்டத்தைப் பற்றி கூறினுர். எங்கேயோ ஓர் காணியை வாங்கப் போவதாகவும் அங்கே இளைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கப் போவதாகவும் கூறினுர்.

வினு :—தலைமன்னுரில் எப்போது இராணுவத்தினரால் கைது செய் யப்பட்டீர் ? எங்கே அழைத்துச் செல்லப்பட்டீர் ?

விடை : தலைமன்னுரிலிருந்து கல்லடிக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். பின்னர் பலாலிக்கும், ஆனையிறவுக்கும் அழைத்துச் செல் லப்பட்டேன். இப்போது C. I. D. இல் இருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி எழுதிய கடிதத்தின் மூலப் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்பு அண்ணனுக்கு, 6-10-83

நான் நலம் தங்கள் சுகத்தையும் அறிந்திட ஆவலாயுள்ளேன்.

இக்கடிதம் கொண்டுவரும் நேசன் உங்களிடம் நேரே சேர்ப்பிப்பார். அத்துடன் உங்களிடம் பல விஷயங்களை இவன் மூலம் பகிர்ந்து கொள்கிறேன். முதலாவது - இப்போ இந்தியாவில் நமது நண்பர்களின் இயக்கங்கள் ஒன்றையொன்று தாக்கி, ஒன்றுக்கொன்று பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்து இயங்கி வருகின்றன. தம்பியை அப்பா உங்களிடம் [illegible] விட்டு வந்தும் கூட, தம்பியின் செயல்திறமை [illegible] பெற்று அவருடன் [illegible] தொடர்பு [illegible] இருக்கும் அவர்களை [illegible] இப்போ பல மோசமான, பாரதூரமான அறிக்கைகள் வெளியிட்டு உள்ளனர். அவர்களுடன் சேர்ந்த பலரே [illegible] TELA என இப்போ பிரச்சாரம் செய்கிறார்கள், அத்துடன் ~~[illegible]~~ இருக்கும் 'வசந்தம்' என இயங்கும் [illegible] தமிழர் பத்திரிகை அறிக்கைகளால் நம்மை தாக்குகிறார்கள். மலையகம் [illegible] சக்திகளாலும், இவர்கள் [illegible] பணம் பெற்று இயங்கும் Information Centre உம் [illegible] எமக்கெதிராக இயங்குகிறார்கள். D.M.K [illegible] அவர்களே இப்போ [illegible] கொண்டிருக்கிறார்கள். இங்கே [illegible] நமது [illegible] உண்மையும் [illegible] இல்லை. இது தான் இப்போதுள்ள நிலை.

இத்தொடர்பில் பத்திரிகையாளர் ([illegible] உதவியுடன்) நாம் நமது சொந்த [illegible] அப்பாவிடமும், [illegible] போய் [illegible] பிரசுரித்துள்ளோம். அதுபோல [illegible], [illegible] ஏற்கனவே [illegible] உண்டு. [illegible] இப்போது [illegible] உதவி செய்தார். இதில் 200 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் வழியாய் உங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளேன்
'அதாவது - வேதாந்த பற்றி சில சிறிய குறிப்பு எழுதினேன்.'
இங்கே இதன் விலை 5/=. உங்களிடமும் பார்த்து வை
த்த பணத்தை சேர்த்து வைக்கவும்.

யோகன் இங்கே வந்து என்னுடன் சேர்ந்து
இயங்குகிறான். உங்களுக்குத் தெரியும் தானே நாம் - ஒரு
திராவிட இயக்கத்திற்கு அத்திவாரமிட்டது. அதன்காரண
மாக இப்போது இங்கே மலைநாட்டில் பெயர் பெற்றிருக்
கிறோம். இது மக்கள் இயக்கத்துடன் ஒத்துழைக்
கும் தமிழ் ஆ. பு. விடுதலைக்காக போராடும் இயக்கமாகும்.
வருடாவருடம் புதுவருடப்பிறப்பு நாடகமும் நாம்
செய்தோம். இதையும் தவிர இப்பகுதியில் இயக்கம்
இயங்கிக் கொண்டே வருகிறது இவ்வாண்டின் தேர்தல்
போன்ற இடங்களில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தது
இருக்கின்ற நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. [illegible]
[illegible] திங்களும் இதில் - இரண்டு பேர் தாயார் தங்கள்
பெயரைக் கொடுத்துள்ளனர். இப்போது இங்கே நாம்
இலங்கை [illegible] உதவியுடன் ஒரு Estate விலைக்கு
வாங்குகிறோம். அதற்கான திட்டம் [illegible] எப்படியும்
வசதியாக உங்களிடமிருந்து உதவியுடன் கிடைக்
கிறது. இப்போதைக்கு இந்த இரண்டு இடங்களும்
போதுமானது. மொத்தம் 100 — 50 வரை பயிர் கொடுக்கலாம்.
உங்களுடைய தில்லை யோகன் வந்ததும் அவருக்கு இங்குள்ள
[illegible] தோட்டங்களை ஒப்படைக்கவும். தங்கையிடம் போன்ற
பக்கங்கள் திட்டமிடவும் அறிவிக்கவும். அண்மையில்
நடைபெறும் தேர்தல் இப்போது வந்து நமக்கு அதிகமாகவே
இயங்குவதால் - உங்கள் பொறுப்பு - ஆலோசனை தேவைப்படு
கிறது. நாம் பெரிய வெற்றி பெறுகிறோம். இப்ப
ஆலோசித்துப் பிறகு விபரமாக எனக்கு உடனே எழுதவும்
போதும் "தமிழ் தேசிய இராணுவம்" என்பதே
நாம் தேர்ந்தெடுத்த பெயர். இப்போதும். உங்களுடைய
த. வி. க. சேர்ந்தவர்கள் ஒத்துழைப்பை [illegible]

1/10/63

R.X 11/11/83

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

SRI VALAMBICA TRADE CENTRE
2-1/5 Stanley Rd
Jaffna

[illegible]
[illegible]

[illegible]

TENA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Overseas Information Series No. 5

Published by the Department of Information, Sri Lanka
Printed at the Department of Government Printing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org